# தோத்திரப் பாடல்கள் - II

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை உமையொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

- திருஞானசம்பந்தர்

### தேவாரம்

மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலன் ஈங்கிவ னென்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய விடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருவால வாயர னிற்கவே.

- திருஞானசம்பந்தர்

### தேவாரம்

அங்கத்துறு நோய்கள் அடி யார் மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

- சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

## கந்தபுராணம்

ஆறிரு தடந் தோள் வாழ்க
　　ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
　　குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
　　யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
　　வாழ்கசீர் அடியார் எல்லாம்.

- கச்சியப்பசிவாச்சாரியார்

இறைசிந்தையுடன் பாடுவோம்.